# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>நாடளாவிய ரீதியிலான இந்தியத் திரைப்பட விழா</u>**
**<u>2025 ஜனவரி 06 ஆம் திகதி இலங்கையில் ஆரம்பம்</u>**

2025 ஜனவரி 06 முதல் 2025 ஜனவரி 10 ஆம் திகதி வரை இலங்கையின் பல்வேறு நகரங்களிலும் நடைபெறவுள்ள இந்தியத் திரைப்பட விழாவில் தெரிவுசெய்யப்பட்ட இந்திய திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன. கொழும்பில் உள்ள PVR Cinema இல் 2025 ஜனவரி 06 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 06.30 மணியளவில், பொலிவூட் ஹிட் திரைப்படமான '83' திரையிடலுடன் இத்திரைப்பட விழாவானது ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

2. கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம், கண்டி, ஹம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள அதன் தூதுவராலயங்கள் கொழும்பு சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்துடன் இணைந்து ஒழுங்கமைத்த இத்திரைப்பட விழாவில் கதை, காதல், அதிரடி மற்றும் வரலாற்றுக் காவியங்கள் உள்ளடங்கிய சிறந்த திரைப்படத் தொகுப்பு காண்பிக்கப்படவுள்ளது. இந்தத் திரைப்படங்கள் ரசிகர்களுக்கு அவர்களின் பன்முக மரபுகளைப் பற்றிய ஒரு பார்வையை வழங்கி இந்திய சினிமாக்களின் பன்முகத்தன்மை மற்றும் அவற்றின் உணர்வினைக் கொண்டாடுகின்றன,

3. கொழும்பிற்கு மேலதிகமாக பதுளை, யாழ்ப்பாணம், காலி, குருநாகல், மாத்தளை, மாத்தறை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களிலும் இவ்விழா கொண்டாடப்படவுள்ளது. கொழும்பில் நடைபெறும் திரைப்பட விழா குறித்த தகவல்களை கீழே தரப்பட்டுள்ள சிற்றேட்டில் பார்வையிட முடியும். இத்திரைப்பட விழாவிற்கான அனுமதி இலவசம், அனுமதி சிட்டைகளை பெற்றுக்கொள்ள dir.icc.colombo@gmail.com மின்னஞ்சலைத் தொடர்புகொள்ளவும்.

**************

**கொழும்பு**
**02 ஜனவரி 2025**



High Commission of India
Colombo
Swami Vivekananda Cultural Centre
Colombo
INDIAN FILM FEST 2025
A KABIR KHAN FILM
INAUGURAL SCREENING
(Invitees Only)
Jan 06
6.30 PM
Audi-04 3D
PVR CINEMA
10.00AM
RRR
K14 001, Faculty of Humanities, University of Kelaniya
1.00PM
Aatam
K14 001, Faculty of Humanities, University of Kelaniya
2.00PM
Thinking of Him
E- Library, Ground Floor, Colombo Public Library
5.00PM
Reva (Gujarati)
Swami Vivekananda Cultural Centre
JAN 07
5.00PM
Vikram (Tamil)
Swami Vivekananda Cultural Centre
5.30PM
Sirf Ek Bandaa Kafi Hein
Panibharatha Theatre, University of Visual and Performing Arts
JAN 08
9.00AM
Toofan Mail
Dept of Govt Information, Ministry of Mass Media for Triforces
3.30PM
Main Atal Hoon
New Art Theatre (NAT) University of Colombo
4.30PM
The Kashmir Files
Photography Society of Sri Lanka, Lionel Wendt Memorial Art Centre, Col 7
5.00PM
Dollu (Kannada)
Swami Vivekananda Cultural Centre
JAN 09
5.00PM
English Vinglish
World Hindi Day Celebration
JAN 10
RSVP TO
dir.icc.colombo@gmail.com
TO GET YOUR TICKETS
NFDC
cinemas of india
National Film Development Corporation of India
Ministry of Information & Broadcasting
Government of India